# பிலேயாமும் பேசும் கழுதையும்

நாய்களை நீ கவனித்திருக்கிறாயா? சில நாய்கள் எஜமான் கட்டளையிட்டபடியெல்லாம் செய்யும். 'நில்' என்றால் நிற்கும்; 'ஓடு' என்றால் ஓடும். 'எடு' என்றால் எடுக்கும். இன்றைக்கு நம் பாடத்தில் உண்மையாகவே ஒரு கழுதை பேசியதைப் பார்க்கப்போகிறோம்.

பாலாக் என்பவன் மோவாப் தேசத்தின் ராஜா. இஸ்ரவேலை எதிர்க்கும் அளவிற்குத் தங்களிடத்தில் சக்தி இல்லை என்று நினைத்தான். ஆனால், பிலேயாம் எனும் தீர்க்கதரிசியை அவனுக்குத் தெரியும். பிலேயாம் ஒருவரை ஆசீர்வதித்தால் அவர் ஆசீர்வாதமாக இருப்பார்; சபித்தால் அவர் சபிக்கப்பட்டுப் போவார் என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே, 'இஸ்ரவேலராகிய அந்தப் பெரிய கூட்டத்தைப் பிலேயாம் சபிக்கவேண்டும்' என்று பிலேயாமுக்குச் சொல்லி அனுப்பினான். பிலேயாமை அழைத்துவர, பதவியில் உயர்ந்த அலுவலர்களையும் அனுப்பினான். அவர்களிடம் ஏராளமான பொன் வெள்ளி முதலான பொக்கிஷங்களையும் அனுப்பினான்.



தேவனை நம்பிய ஒரு தீர்க்கதரிசியாக அங்கே பிலேயாம் வாழ்ந்து வந்தான். ஆனாலும் பேராசையால் அவன் அதிக காலம் தேவனுக்குப் பிரியமாக வாழவில்லை. இருப்பினும் தன்னைத் தேடி வந்த அரசனுடைய ஆட்களுடன், போகவா? வேண்டாமா என்று தேவனிடம் கேட்டான். "நீ அவர்களுடன் போக வேண்டாம். இஸ்ரவேலரை நான் ஆசீர்வதித்திருக்கிறேன்; எனவே நீ அவர்களை சபிக்கக் கூடாது" என்றார் தேவன்.

எனவே, அவர்களிடம் பாலாக், "ராஜா எனக்கு வீடு நிறைய வெள்ளியையும், பொன்னையும் கொடுத்தாலும் நான் தேவனுக்குத்தான் கீழ்ப்படிவேன், வரமாட்டேன்" என்றான். ஆனாலும், அவர்களை உடனே திருப்பியனுப்பாமல், அவர்களை

## மனன வசனம்

**ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்.**

**யோவான் 14:23.**

வரவேற்று, உபசரித்து இரவில் தன் வீட்டில் தங்கவைத்தான்.

இருப்பினும், ராஜா இன்னமும் அதிகமான, மிகவும் விலை உயர்ந்த பொருட்களையும் அதிகப் பொன்னையும் வெள்ளியையும் கொடுத்து அனுப்பினான். தேவன் அன்று இரவில் பிலேயாமிடம், ‘‘நீ அவர்களுடன் போ; ஆனால், நான் சொல்வதை மாத்திரமே சொல்’’ என்றார். பிலேயாம் தன் கழுதைமேல் ஏறி அவர்களுடன் சென்றான்.

போகும்போது, தூதன் வழி மறித்தான்; எனவே கழுதை, சாலையில் இருந்து விலகி வயலில் சென்றது. ஆதலால், கழுதையை அடித்தான். மறுபடியும் தூதன் மறித்ததால், கழுதை ஒதுங்கியது. எனவே பிலேயாமின் கால் சுவரில் உரசி வலித்தது; மீண்டும் கழுதையை அடித்தான். மூன்றாவது முறையாகத் தேவதூதன் கழுதையை மறித்தான். விலகமுடியாத இடுக்கமான பாதையில் கழுதை நின்றுவிட்டது. இப்போதும் கழுதையை அடித்தபோது, தேவன் கழுதையின் வாயைத் திறந்தார், ‘‘நீர் என்னை மூன்று முறை அடிக்கும்படிக்கு நான் என்ன தப்புசெய்தேன்?’’ என்று கேட்டது.

ஆனாலும், ‘கழுதை பேசுகிறதே!’ என்று உணராமல் பிலேயாமும் பேசிக்கொண்டிருந்தான். அப்போது தூதன், ‘‘கழுதை விலகிப்போனதால் நீ பிழைத்தாய்; இல்லை என்றால் நான் உன்னைக் கொன்றிருப்பேன்’’ என்றார். மேலும், ‘‘தேவன் சொல்வதைத் தவிர வேறொன்றையும் பேசக்கூடாது’’ என்று எச்சரித்து அனுப்பினார்.

பாலாக்கிடம், ‘‘தேவன் சொல்லுவதையே நான் செய்வேன்’’ என்றான். அவனை எந்த இடத்திற்குப் பாலாக் கூட்டிச் சென்று இஸ்ரவேலரை சபிக்கச் சொன்னாலும் ஆசீர்வாதமே பிலேயாம் வாயிலிருந்து வந்தது.

‘‘ஒரு செங்கோல் இஸ்



## செய்தி

**நாம் தேவனின் போதனைகளைப் பின்பற்றும்போது தேவனைத் தொழுகிறோம்.**

வேலிலிருந்து எழும்பும்; அது ...எல்லாரையும் நிர்மூலமாக்கும்'' என்றும் தீர்க்கதரிசனம் சொன்னபோது, பிலேயாமை பாலாக்'ஓடு'என விரட்டினான்.

இதன்மூலம் பிலேயாமுக்கு தேவன் ஒரு பாடம் கற்றுக் கொடுத்தார். அன்பே, பிலேயாம் போல் செயல்படாமல், தேவனுக்கு முதலிடம் கொடு.

### செய்முறை

இந்தப் பாடத்தில் பிலேயாமின் கண்களுக்கு தேவதூதன் மறைவாயிருந்தார். அதேபோன்று பாடத்தில் வரும் பெயர்கள் சில இங்கே கட்டத்தினுள் மறைவாயுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து வட்டமிடுக.

**(பிலேயாம், பாலாக், ராஜா, கழுதை, மோவாப்)**

| | | | |
|---|---|---|---|
| ரா | பா | லா | க் |
| ஜா | பி | க | த |
| ப | லே | ழு | ம |
| ட | யா | தை | ய |
| ம் | ம் | வா | டி |
| மோ | வா | ப் | பி |